1983 ஜனவரி 31]

பிரமலை கள்ளர்களுக்கு வீடுகட்ட வழங்கப்படும் தொகை

*வினா எண். 52—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரமலை கள்ளர்களுக்கு ஒரு நபருக்கு வீடு கட்ட எவ்வளவு பணம் இனாமாக அரசு கொடுக்கின்றது?

(ஆ) இதில் அம் மக்களின் பங்காக எவ்வளவு பணம் கட்டப்பட வேண்டும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) மற்றும் (ஆ) பிரமலைக் கள்ளர்களுக்கு கட்டப்படும் வீட்டின் மதிப்பீடு ரூ. 4,300 ஆகும், இதில் ரூ. 3,225 அரசு மானியமாகவும் ரூ. 1,075 வீடு கட்டிக் கொள்கிறவர்களின் பங்காகவும் இருக்கும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டுகிற திட்டத்திலே அவர்கள் முன்கூட்டி தாங்கள் கட்ட வேண்டிய 1,075 ரூபாயை கட்டிவிட வேண்டுமென்றும், இதை காண்ட்ராக்ட் முறை மூலமாகத்தான் கட்டவேண்டுமென்றும் ஒரு முறை இருப்பதால் பலபேர்கள் இதனை பயன்படுத்த முடியவில்லை. ஆகவே 4,300 ரூபாய் எஸ்டிமேட்டிலே கட்டுகிற வீடுகள் எஸ்டிமேட்டினுடைய அளவிற்குள் கட்டிக் கொடுக்கிற நிலையை அனுமதித்து 3,225 ரூபாயை சொந்தமாக கட்டுகிறபோது அவர்களுக்கே பணம் கொடுப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்கு 4,300 ரூபாய் ஆகுமென்று முன்பு கணக்கெடுத்து அதிலே நான்கில் ஒரு பங்கினை வீடு கட்டுகிறவர்கள் தரவேண்டுமென்றும், மீதி மூன்று பங்கினை அரசு மானியமாகத் தரும் என்றும் நாம் குறிப்பிட்டிருந்தோம். இப்போது ரூ. 4300—ல் அத்தகைய வீடுகள் கட்டுவதற்கு சிரமம் என்பதால் ரூ. 5,600 ஆகுமென்று கூறப்பட்டிருக்கிறது. அதிலே அரசினுடைய பங்கு 4,200 ரூபாயாக இருக்கும். அவரவர்கள் தனியாக கட்ட வேண்டியது ரூ. 1,400 ஆக அமையும். அவர்கள் நான்கில் ஒரு பங்கு கட்டுகிற சூழ்நிலையில் அரசு மூன்று பங்கினைத் தரும். இப்போது அரிசன வீட்டு வசதி வாரியத்தினரே கட்டுகிற சூழ்நிலையைத்தான் பெற்றிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல மாற்றம் செய்வதனால் நலம் ஏற்படும் என்றால் அதுபற்றி ஆலோசிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரமலைக் கள்ளர்களுக்கு வீடுகட்டும் இந்தத் திட்டத்தின் கீழே எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டது? எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய முழு விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அரிசனங்கள், பிரமலைக் கள்ளர்கள் வீடு கட்டும் திட்டத்திலே குறிப்பிட்ட அளவு, அதாவது பேஸ் மட்டம் வரை அவர்கள் கட்டிய பின்புதான் நிதி ஒதுக்கப்படு கிறது. இதனால் ஏற்கனவே அவர்கள் செய்யவேண்டிய வேலையில் சுணக்கம் ஏற்பட்டு அந்த நிதியைப் பெறமுடியாத சூழ்நிலையிருக்கிறது. ஆகவே அதைப் பரிசீலனை செய்து மாற்ற அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வீடு கட்டுகிறவர்கள் தங்களுக்குரிய கஷ்டங்களை எடுத்துத் தெரிவிப்பார்களானால், அந்த கஷ்டங்களை எந்த வகையிலே போக்கலாம் என்று அரசு ஆராய்ந்து, போக்க ஆவன செய்யும். ஆனால் எப்பொழுதும் அவர்கள் பங்கு 1/4 பங்கு அதனைத் தருகின்ற முயற்சியிலே அவர்கள் ஈடுபடவேண்டும். மீதி 3/4 பங்கை அரசு தருவதிலே எந்தவித இடர்பாடு அல்லது சங்கடம் ஏற்பட வழியில்லை. அவர்களுக்கு ஏதாவது சங்கடம் இருந்தால், என்ன சங்கடம் என்று தெரிவிப்பார்களானால், சங்கடத்தை எப்படிப் போக்கலாம் என்பதை அரசு ஆராயும்.

தமிழ்நாட்டில் பள்ளிக் கட்டடங்களை கட்ட அரசுடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவி பெறும் திட்டம்

*வினா எண். 65—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உயர்நிலைப்பள்ளி, உயர் செகண்டரி பள்ளி கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசுடமையாக்கப்பட்ட பாங்குகள் மூலம் கடனுதவி பெற அரசு செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம்.

திரு. என். எ. வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே, அரசு உயர் நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலே மாணவர்கள்